<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 01/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | லட்சுமி | நாள் | 13.04.2023 |
| கணவர் பெயர் | மாணிக்கம் | | |

<u>3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>

1) 1ம் பிரதிவாதி காவேரிக்கு தாவா சொத்து கிரய பத்திரத்தின் படி பாத்தியப்பட்டது என நான் சொல்லியுள்ள நிலையில், மேற்படி கிரய பத்திரத்தின் தேதி எனக்கு தெரியுமா என்றால், அதுகுறித்து எனக்கு ஞாபகமில்லை.

2) நான் சொல்வது போல் காவேரிக்கு தாவா சொத்து கிரய பத்திரத்தின் படி பாத்தியப்பட்டது அல்ல என்றாலும், வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

3) தாவா சொத்தும், இதர சொத்துக்களும் ஆதியில் 1ம் பிரதிவாதியின் தந்தை பெருமாள் கவுண்டருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் என்றால், சரியல்ல. தாவா சொத்தும், இதர சொத்துக்களும் பெருமாள் கவுண்டரின் வாரிசுகளுக்கிடையே 17.09.1976ம் தேதியில் ஏற்படுத்திக்கொண்ட பாகபிரிவினையின் படி 1ம் பிரதிவாதி காவேரிக்கு "E" செட்யூல் சொத்தாக ஒதுக்கப்பட்டவை என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது.

4) எனக்கு மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் தெரிந்தும் தற்போது தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. தாவா சொத்திற்குரிய பட்டா எண் எனக்கு சரியாக நினைவில்லை.

5) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கிரய பத்திரத்தில் 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் தரப்பினர்களாக கையெழுத்திடவில்லை என்றால், மேற்படி கிரயத்தின்போது 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் வராததால், அவர்களுக்கு பதிலாக மற்ற நபர்கள் எழுதிக்கொடுத்தனர்.

6) மேற்படி 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் மேற்படி கிரய பத்திரத்தில் சாட்சி கையெழுத்து கூட இடவில்லை என்றால், அவர்கள் வரவே இல்லை.

7) மேற்படி வா.சா.ஆ.1 கிரய பத்திரம் என் பெயரில் 1ம் பிரதிவாதி காவேரி எழுதி கொடுத்த சமயத்தில், என் கணவர் மாணிக்கம் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தார் என்றால், சரிதான். ஆனால் அவர் வெளியூரில் பணியாற்றினார்.

8) என் கணவர் மாணிக்கமும், 1ம் பிரதிவாதி காவேரியும் நண்பர்கள் என்றால், சரியல்ல. நான் சொல்வது பொய்யானது என்றாலும், 1ம் பிரதிவாதி காவேரியும், என் கணவரும் நண்பர்கள் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

9) என் பெயரில் 1ம் பிரதிவாதி காவேரி தாவா சொத்தை கிரயம் அளிப்பதற்கு முன்பே அவரது வாரிசுகளான 3 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளுக்கும், மேற்படி காவேரிக்கும் மன வருத்தம் இருந்தது என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது.

10) 1ம் பிரதிவாதி காவேரி குடும்பத்துடன் சேர்ந்து வாழாமல் தான்தோன்றி தனமாக வாழ்ந்து வந்தார் என்றாலும், 3 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளுக்கும், மேற்படி 1ம் பிரதிவாதி காவேரிக்கும் சுமூக உறவு இல்லை என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது.

11) அவ்வாறு 3 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளுக்கும், அவர்களது தந்தை 1ம் பிரதிவாதி காவேரிக்கும் இடையே உள்ள சுமூகமற்ற நிலையில் என் கணவர் மாணிக்கம் சாதகமாக பயன்படுத்திக்கொண்டு 3 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளுக்கு சொந்தமான பூர்வீக சொத்தையும் சேர்த்து என் பெயரில் கிரயம் பெற்றுக்கொண்டார் என்றால், சரியல்ல.

12) தாவா சொத்தை என் பெயரில் கிரயம் பெற்றதற்கு பின்னிட்டு நான் எப்போது மேற்படி சொத்திற்குரிய பட்டாவை என் பெயரில் மாற்றக் கூறி வருவாய் துறையில்

மனு அளித்தேன் என்றால், மனு அளித்தேன். ஆனால், எப்போது அளித்தேன் என எனக்கு ஞாபகமில்லை. நான் பட்டா மாறுதலுக்கு விண்ணப்பித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், 3 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளின் பெயரிலுள்ள நிலத்தையும் சேர்த்து நான் தவறாக கிரயம் பெற்றுவிட்டதால்தான், வருவாய் துறையில் என் பெயரில் பட்டா வழங்கவில்லை என்றால், சரியல்ல.

13) வா.சா.ஆ.1 கிரய ஆவணம் என் பெயரில் கடந்த 10.12.2010ம் தேதியில் எழுதப்பட்டது என்றால், எனக்கு ஞாபகமில்லை. வா.சா.ஆ.2 கந்தாய ரசீதுகள் 1ம் பிரதிவாதி காவேரியின் பெயரில் உள்ளது என்றால், சரியல்ல. என் பெயரில்தான் உள்ளது. நான் பொய்யாக கிரயம் பெற்றதால்தான் மேற்படி கந்தாய ரசீதுகள் அனைத்தும் 1ம் பிரதிவாதி காவேரியின் பெயரில் உள்ளது என்றால், சரியல்ல.

14) அ.வ.எண்.247/2012 என்ற வழக்கை இறந்துபோன ராஜேந்திரன் மற்றும் அவரது மனைவி ஆகியோர் 1ம் பிரதிவாதி காவேரியின் வாரிசுகளான 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளின் மீது இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர் என்றால், சரிதான். மேற்படி வழக்கில் நான் தரப்பினர் அல்ல என்றால், எனக்கு நினைவில்லை.

(3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/−திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.